மிக முக்கியம் : 2023 ஆகஸ்ட் 04ம் திகதி

# சிசு சவிய 2023

**5**

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

## முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் I** **1 மணித்தியாலம்**

**பெயர் :.....................................................................................**

## சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

Education
AptitudeExam.com

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர் / ஆசிரியர்களுக்கு,**

- இவ்வினாப்பத்திரத்தை பிரதியிட்டு 2023 ஆகஸ்ட் 4ம் திகதி உங்கள் பாடசாலையின் தரம் 05 சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள்,பிரச்சினைகள் இருப்பின் தங்களது கோட்டத்திற்கு பொறுப்பான ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் மாகாண ஆரம்பப்பிரிவிற்கு அழைத்து ஆலோசனைகளை பெறுங்கள்.
- விடைப்பத்திரம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- வேறு மாகாண மாணவர்களும் இவ்வினாப்பத்திரத்தின் பயனைப் பெறலாம்.
- இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி.
- மாகாண பணிமனையினால் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு அமைய புள்ளிகளை பதிவு செய்யுங்கள்.
  - 2023 ஆகஸ்ட் 4ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.


| வினாத்தாள் II | வினாத்தாள் I |
|---|---|
| 1மணித்தியாலமும் 15 நிமிடமும் | 1மணித்தியாலம் |

- புள்ளி பகுப்பாய்வின் பின் மாணவர்களுக்கான இனங்காணப்பட்ட மேலதிக கற்றல் மேம்பாடுகளை மேற்கொள்க.
- இவ்வினாப்பத்திரத்தை எழுத சந்தர்ப்பம் இல்லாத மாணவர்களுக்கு வீட்டிலிருந்து செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப்பிரிவு**


✷ தரப்பட்டுள்ள படங்களை அவதானிக்க. 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க.

**01. கட்டத்தில் உள்ள படத்திற்கு ஒத்த படத்தை தெரிவு செய்க.**



1 2 3

**02. A போன்ற படத்தைப் பெறுவதற்கு B இல் எத்தனை மாற்றங்களை செய்ய வேண்டும்.**



A படம்



B படம்

1. 2 2. 3 3. 4

**3. முதலில் தரப்பட்டுள்ள உருவை முழுமையாக்குவதற்கு சேர்க்கப்பட வேண்டிய பகுதியைத் தெரிவு செய்க.**

Education கல்வி AptitudeExam.com



1 2 3

- **கட்டங்களில் சில எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி 4 ஆம் 5 ஆம் வினாக்களுக்கான விடைகளை தெரிவு செய்க.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 18 | B | 24 | 50 | 55 |
| 6 | 15 | 25 | C | 45 | |
| A | 12 | 20 | 35 | 40 | |
| 5 | 10 | 15 | D | | 70 |

**04.கட்டங்களில் A மற்றும் B எழுத்துக்களுக்கு வரவேண்டிய எண்கள் முறையே,**

1. 9 மற்றும் 20 2. 9 மற்றும் 21 3. 11 மற்றும் 21

**05.கட்டங்களில் C மற்றும் D எழுத்துக்களுக்கு தொடர்புடைய எண்கள் முறையே,**

1. 45 மற்றும் 75 2. 40 மற்றும் 65 3. 30 மற்றும் 80

06. ஒரு இயந்திரம் வெவ்வேறு வர்ணங்களில் இறப்பர் பந்துகளை உற்பத்தி செய்கின்றது. அந்த இயந்திரம் ஒவ்வொரு 6 பந்துகளுக்கும் ஒரு நீலநிற பந்தை உற்பத்தி செய்கின்றது. அதன்படி 8 நீலநிற பந்துகள் உற்பத்தி செய்யப்படும் போது இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 54　　2. 48　　3. 56

✷ **ஒரு குறிப்பிட்ட அடுக்கு மாடிக் குடியிருப்பில் A , B , C என மூன்று வீடுகள் இருந்தன. அவ் வீடுகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.**

- C வீட்டில் இருப்பதைப் போன்று இரு மடங்கு B வீட்டில் இருக்கின்றார்கள்.
- B மற்றும் C ஆகிய வீடுகளில் உள்ளவர்களின் கூட்டுத்தொகை A வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு சமனாகும்.
- B வீட்டிலிருந்து ஒருவர் C வீட்டிற்குச் செல்லும் போது C வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை 5 ஆக மாற்றமடையும்.

07. A வீட்டிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

1. 6　　2. 10　　3. 12

- **குமாரி ஒரு பிஸ்கட் பெக்கட்டை வாங்கினாள். அதில் 3 வகையான பிஸ்கட்டுக்கள் இருந்தன. சொக்லைட் பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை 8 ஆகும். மிகுதி பிஸ்கட்டுகளில் ⅓ கஸ்டட் கிரீம் பிஸ்கட் ஆகும். மீதமுள்ள பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை 12 ஆகும்.**

08. அங்குள்ள கஸ்டட் பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை யாது?

1. 8　　2. 6　　3. 9

09. அங்குள்ள 3 வகையான பிஸ்கட்டுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 24　　2. 25　　3. 26

10. **நல்ல நல்ல பாடலை**
**நாமும் கூடிப் பாடுவோம்**
**நல்ல நல்ல அறிவினை**
**நாமும் கற்று ஆடுவோம்**

இப்பாடலடிக்குப் பொருத்தமான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

1. பாடல்களை சேகரித்து வைத்தல்.
2. நாம் ஞானத்தினை தேடிக் கொள்ளல்.
3. திறமையாக நடனம் ஆடுதல்.

- **கீழேயுள்ள தகவல்களைக் கொண்டு 11 மற்றும் 12 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**
  - ✷ **சதீஸ் , சரண் , லோசன் , புவேக்ஷான் மற்றும் ருக்ஷான் ஆகிய ஐந்து பாடசாலை மாணவர்கள் உள்ளனர்.**
  - ✷ **சதீஸ் மற்றும் ருக்ஷான் நீல நிற பாடசாலை புத்தகப் பைகளையும் வைத்துள்ளனர். மற்றைய மாணவர்கள் கருப்பு நிற பைகளை வைத்துள்ளனர்.**
  - ✷ **சதீஸ் மற்றும் புவேக்ஷான் அவர்களின் பைகளில் சிவப்பு நிற வட்டவடிவ சின்னங்களும் ருக்ஷான் மற்றும் சரண் இவர்களின் பைகளில் மஞ்சள் நிற முக்கோண வடிவான சின்னங்களும் ஒட்டப்பட்டுள்ளன.**

11. இவ்வாறு சிவப்பு நிற வட்டத்துடன் நீல நிற பையுடைய மாணவன் யார்?


1. சதீஸ்　　2. சரண்　　3. புவேக்ஷான்

Education கல்வி අධ්‍යාපන AptitudeExam.com

12. .மேற்கண்ட தகவல்களின் படி தவறான கூற்றாகக் கருதப்படுவது யாது?
   1. ருக்ஷான் மஞ்சல் நிற முக்கோண சின்னத்துடன் நீல நிற பையை வைத்துள்ளான்.
   2. புவேக்ஷான் சிவப்பு நிற வட்ட சின்னத்துடன் கருப்பு நிற பையை வைத்துள்ளான்.
   3. லோசன் நீல நிற முக்கோண சின்னத்துடன் கருப்பு நிற பையை வைத்துள்ளான்.


13. தேஜேஸ் பி.ப 5. 00 மணிக்கு வீட்டிற்குச் சென்ற போது அவரது நிழல் இடது கை பக்கம் விழுந்தது. தேஜேஸ் சென்ற திசை யாது?
   1. தெற்கு 2. வடக்கு 3. கிழக்கு

14. 510 , 294 மற்றும் 53 , 467 ஆகிய எண்களை இடமிருந்து வலமாகவும் 595 மற்றும் 420 எண்களை மேலிருந்து கீழாகவும் நிழற்றப்படாத கட்டங்களை நிரப்பும் போது 4 வது நிரலில் மேலிருந்து கீழாக வரும் எண் யாது?
   1. 69
   2. 74
   3. 420




15. ஒரு விழாவில் வீதியின் இரு பக்கத்திலும் மின்குமிழ் கொடிகள் தொங்கவிடப்பட்டன. மின்குமிழ்கள் தொங்கவிடப்படும் இரு மின் கம்பங்களுக்கிடையிலான தூரம் 3m 50cm ஆகும். வீதியின் ஒரு பக்கத்திற்கு 4 மின் கம்பங்கள் காணப்படுமாயின் வீதியின் இருபுறமும் தொங்கவிட தேவையான கொடியின் நீளம் யாது?
   1. 28m 2. 21m 3. 28m 50cm

16. படத்தில் காணப்படும் தராசு சமமாக காணப்பட்டன. எனின் ■ குறியீட்டுக்கு சமமான உருக்கள் அடங்கிய விடை யாது?
   1. ▲ ● 2. ▲▲ 3. ▲ ▲●



17. ரொக்ஷான் பிறந்த தினத்தின் போது அவருடைய தாயிற்கு 25 வயதாகும். ரொக்ஷானின் தம்பி பிறக்கும் போது தாயிற்கு 29 வயதாகும். ரொக்ஷானுக்கு 10 வயதாகும் போது அவரது தம்பிக்கு இப்போது எத்தனை வயதாகும்?
   1. 4 2. 5 3. 6

18. விரிக்கப்பட்ட தாயக்கட்டையின் முகம் படத்தில் தரப்பட்டுள்ளது. முகங்களில் எண்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் எதிர்ப்பக்கங்கள் அதன் மடங்குடன் தொடர்புபட்டது. எனவே இடைவெளிக்கு வரவேண்டிய எண் யாது?




   1. 25 2. 20 3. 30

19. அறிவு திறன் போட்டியில் ஒரு சரியான விடைக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு தவறான பதிலுக்கும் 5 புள்ளிகள் குறைக்கப்படும். 10 வினாக்களுக்கு விடையளித்த மாணவன் 6 வினாக்களுக்கு சரியாக பதிலளித்தான். எனின் எத்தனை புள்ளிகள் பெற்றிருப்பான்?
   1. 40 2. 45 3. 55


kalvi.lk

20. பெட்டியில் 1800 l நீர் உள்ளது. அதில் ஒரு துளையிலிருந்து 2 நிமிடங்களுக்கு 6 l நீரை அகற்றுகின்றார்கள். தொட்டியிலுள்ள நீர் முழுமையாக வெளியேற எவ்வளவு நேரம் எடுக்கும்?

1. 12 மணி
2. 10 மணி
3. 15 மணி

21. வங்கியில் காசு வைப்பிலிடுவதற்காக சென்ற மேனு அவருக்கு முன்னாடி 15 பேர் இருப்பதை அவதானித்து வரிசையில் நின்றார். அவசர நிலை காரணமாக வரிசையிலுள்ளவர்கள் பின்புறமாக திரும்பினார்கள். இதன் காரணமாக இறுதியாக இருந்தவர் முதலாவதாக நிற்கின்றார். மேனுவிற்கு முன்னதாக 7 பேர் இருக்கின்றனர். அந்த வரிசையில் இருந்த நபர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 22
2. 23
3. 24

22. கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 10 நிமிடம் தாமதமாகக் காட்டுகிறது. அந்த கடிகாரம் மு.ப 6. 00 மணிக்கு சரியான நேரத்தைக் காட்டுகிறது. எனின், இக் கடிகாரம் பி.ப 6. 00 மணியைக் காட்டும் போது சரியான நேரம் யாது?

1. பி.ப 4. 00
2. பி.ப 7. 00
3. பி.ப 8. 00

23. 12m நீளமுடைய இரும்புக் குழாய் ஒன்றின் நிறை 240kg எனின், 180kg உடைய இரும்புக் குழாயின் நீளம் யாது?


1. 8m
2. 9m
3. 10m



24. ராகுலின் உண்டியலில் இருந்த மொத்த தொகை ரூபாய் 408.00 ஆகும். இதில் இருந்த நாணயக்குற்றிகளின் எண்ணிக்கை சமனாகக் காணப்பட்டது. எனின், உண்டியலிலுள்ள மொத்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?





1. 18
2. 21
3. 24

25. கீழே காணப்படும் உருவை புள்ளிக் கோட்டு வழியே வெட்டிய பின்பு வெட்டப்பட்ட பகுதியின் தோற்றம் யாது?



1. 
2. 
3. 

26. இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 15
2. 16
3. 17

- **தனுசியின் நிறை 30kg ஆகும். சுகியின் நிறை தனுசியை விட 5kg நிறை அதிகம். ஆனால் கீதாவை விட 9kg குறைவு**

27. இக் கருத்துப்படி சரியான கூற்று யாது?

குறைவு < அதிகம்

1. தனுசி < சுகி < கீதா
2. சுகி > கீதா < தனுசி
3. தனுசி > சுகி > கீதா

28. கீதாவின் நிறை யாது?

1. 35kg 2. 38kg 3. 44kg

- **திலுக்ஷன் ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 4m தூரத்திற்கு மேற்கு நோக்கி சென்று அங்கிருந்து 6m தூரத்திற்கு வடக்கு நோக்கி சென்று அவ்விடத்திலிருந்து 6m தூரம் கிழக்கு நோக்கி செல்கிறான்.**

Education
கல்வி
அධ්‍යාපන
AptitudeExam.com

29. திலுக்ஷன் இப்போது இருப்பது ஆரம்ப இடத்திற்கு எத்திசையிலாகும்?

1. வடக்கு 2. நிருதி மூலை 3. ஈசான மூலை

30. மீண்டும் ஆரம்ப இடத்திற்கு வருவதற்கு சுவர் எவ்வாறு வரவேண்டும்?


1. தெற்கு நோக்கி 6m சென்று பின்னர் 2m மேற்கு நோக்கி செல்ல வேண்டும்.
2. 4m வடக்கு நோக்கியும் பின்பு 2m கிழக்கு நோக்கிச் செல்ல வேண்டும்.
3. தெற்கு நோக்கி 6m சென்று பின்னர் 2m கிழக்கே செல்ல வேண்டும்.

31. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


170 (24) 165 (30) 160 (36) ...... (.....)

1. 155 , 42 2. 150 , 42 3. 150 , 46

32.



= 49 எனின்,



= ...............


1. 28 2. 21 3. 35

33. கீழேயுள்ள வரைபடத்தின் படி மரம் , பூ , மரம் , பூ என்ற வரிசையில் 3 மரங்கள் 3 பூக்களை ஒழுங்கு முறையில் வைக்க குறைந்தபட்சம் எத்தனை படங்களை மாற்ற வேண்டும்?



1. 2 2. 3 3. 4

34. உருவிலுள்ள நிறந்தீட்டப்பட்ட கட்டங்களை அவதானித்து ஒன்று விட்டு ஒன்று நிறந்தீட்டும் போது நிறந்தீட்டப்பட்ட முழு கட்டங்கள் எத்தனை?



1. 16
2. 24
3. 32

Education கல்வி
AptitudeExam.com

35. வரிசையொன்றில் வெள்ளை , நீல நிற ஆடைகளை அணிந்த குழந்தைகள் மாறி மாறி இருக்கின்றனர். முதலாவதாக வெள்ளை நிற ஆடை அணிந்தவராவார். வரிசையில் இறுதி 5 குழந்தைகள் நீல நிற ஆடை அணிந்தவர்களாவர். அங்குள்ள மொத்த குழந்தைகள் 38 ஆகும். ஆகவே அவ் வரிசையில் நீலம் மற்றும் வெள்ளை ஆடையணிந்த குழந்தைகளின் எண்ணிக்கை முறையே,

1. 21 நீலம் 17 வெள்ளை
2. 17 நீலம் 21 வெள்ளை
3. 20 நீலம் 18 வெள்ளை

36. கயிற்றில் சிவப்பு , நீலம் , ஊதா ஆகிய நிற பலூன்கள் தொடரொழுங்கில் தொங்கவிடப்பட்டுள்ளன. அக்கயிற்றில் 213 பலூன்கள் இருக்கின்றதெனின் அங்கு காணப்படும் சிவப்பு மற்றும் ஊதா நிற பலூன்களின் எண்ணிக்கைகள் முறையே அமைவது,


1. 53 , 54 2. 53 , 53 3. 54 , 53

37. மேசையின் மேல் கொய்யா , ஸ்ரோபரி , அப்பிள் ஆகிய பழங்கள் 3 உள்ளன. அம்மா கொய்யா மற்றும் அப்பிள் பழத்தையும் , அப்பா கொய்யாப் பழத்தையும் உதினி 3 வகைப் பழங்களையும் விரும்புகின்றனர். மூவருக்கும் பிரித்துக் கொடுத்தால் அம்மாவுக்குக் கிடைக்கும் பழம் எது?

1. கொய்யா
2. ஸ்ரோபரி
3. அப்பிள்


- **நகரம் ஒன்றில் அமைந்துள்ள இடங்கள் சிலவற்றின் அமைவிடங்கள் கீழே தரப்பட்டுள்ளது.**

38. பள்ளிவாசலில் இருந்து பாடசாலையினூடாக கடையைக் கடந்து வீட்டிற்குச் சென்று மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு வரும் ஒருவர் செல்ல வேண்டிய மொத்த தூரம் யாது?




1. 28 km
2. 30 km
3. 32 km

- **நீலம் , அகலம் மற்றும் உயரம் 16cm உடைய இந்த சதுரக் குற்றிக்கு எல்லா பக்கமும் சிவப்பு நிறம் பூசப்படுகிறது. இந்த பெரிய சதுரக் குற்றியில் 4cm பக்கம் கொண்ட சிறிய சதுரக் குற்றிகள் வெட்டியெடுக்கப்படுகிறது?**




39. வெட்டப்பட்ட சிறிய சதுரக் குற்றிகள் எத்தனை?

1. 27
2. 46
3. 64

40. வெட்டிய பின் 3 பக்கம் நிறம் பூசப்பட்ட சிறிய சதுரக் குற்றிகள் எத்தனை?

1. 8
2. 10
3. 12